மந்தையம்மன் துணை

# மனித இனம் உறுதியாக இறுதியாக 5 வருடத்திற்குள் அழியும்.

1. பழைய காரணம் இயற்கை, பூகம்பம் அழித்துவிடும்.
2. பைபிள், குரான் நூல்கள் எல்லாம் சொன்ன ஆண்டுகள் பொய்யாகி விட்டன.

## புதிய காரணம் என்ன?

1. பாலீதின் பைகள், பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகம், டீ கப் ஆகியவை. இவைகள் தான் பூமியின் முதல் எதிரிகளே மண்ணின் வளத்தை சாகடிக்கும், மழை பெய்யால் போவதற்கும் இவைதான் காரணம். மினரல் வாட்டர், மினரல் என்றால் கனிமம் என்று பெயர். பூமியின் அடியில் இருந்து வரும் தண்ணீர் தான் ஒரிஜினல் மினரல் வாட்டர். அதிலும் கெமிக்கலை கலக்க ஆரம்பித்து விட்டாங்க.

2. இரண்டாவதாக யாருமே உடலுக்கு உழைப்பு கொடுப்பதில்லை. ஓய்வும் முடிந்தால் உடலுக்கு சுறுசுறுப்பு தருவதாக சொல்லி வாயில் மெல்லும் போதைபொருளால் அவன் அழிவான். அவன் அருந்தும் மது, பான்பராக், கணேஷ் பாக்கு இவை உடலிலிருந்து உமிழ்நீரை மொத்தமாக எடுத்துவிட்டு அவனை சக்கையாக திரியவிடும். அவனால் தன் மனைவியிடம் கட்டாயம் வாரிசை சுமக்க கொடுக்க முடியாது. ஒவ்வொரு குடும்பத்தின் வம்சம்(வாரிசு) முதலில் அழியும்.

3. ஒவ்வொரு பெண்ணும் தன் உடல் உறுப்புகளை (ஆண்களுக்கு உணர்ச்சி தரக்கூடிய) பிறர் பார்க்காதவாறு துணிகள் அணிய வேண்டும். இடிப்பின் இடுக்கில் தொங்கும் தசைகள் உங்களுக்கு அழகு தருவதாக எண்ணுகிறீர்கள். அது மாபெரும் தவறு.... . நைட்டிகள் என்றால் இரவில் போடக்கூடிய உடைகள் என்று பெயர். கால்பங்கு பெண்கள் வீட்டில் இருக்கும் எல்லா நேரமும் பயன்படுத்துகிறீர்கள். அதன்மேல் எந்ததுணியும் போடுவதில்லை. நீங்கள் குனியும் போது எவ்வளவு மோசமாக இருக்கும் என்று தெரியாதா?... பெண்ணே????.... . ஒரு பெண் *எந்த* அளவுக்கு கற்டையும்(கற்பபை), மானத்தையும் காப்பாற்றி வைக்கிறாளோ அவளால் சாதிக்க முடியாத சாதனைகள் உலகில் எதுவும் இல்லை. எடுத்துக்காட்டாக நிறைய நெல்மணிகள் வைத்துஇருக்கும் நெல்செடி அதன் மணிகளை தாங்கி குனிந்தவாறு வயலில் இருக்கும். ஒருமணி கூட பிடிக்காத கருக்கால் நெல்செடி நிமிர்ந்து, செறுத்துக்கொண்டு இருக்கும். பெண்கள் எவ்வளவு சாதனை படைத்தாலும், அழகுபொருட்கள் அணிந்த இருந்தாலும், விலை மதிப்புமிக்க பொருட்கள் வைத்து இருந்தாலும் எளிமையாக இருங்க. அப்பதான் அந்த செல்வங்கள் உங்களிடம் நிரந்தரமாக சில ஆண்டுகளாவது நிலைத்து நிற்கும். உயிரே போனாலும் பரவாயில்லை பொய் சொல்லாதிங்க. அந்த பொய்யை மறைக்க 10பொய் சொல்ல வேண்டிவரும். நம் வார்த்தைக்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். பெண்கள் அனைவரும் கட்டாயம் உழைத்துக்கொண்டே இருக்கனும். அப்பதான் இந்தியா நம்நாடு முன்னேறும். ஆண்கள் நமக்கு துணைவன் மட்டுமே ஆவான். அவனை சாராயக்கடைக்கு அனுப்பி வைக்க தயாராகாதீர்கள். அவன் உன்சந்தோசத்துக்கும், பிள்ளைகளுக்கு மட்டுமே அடிமை. நீ கணவனை ஒழுங்காக கவனிக்காததால்தான் அவன் எய்ட்ஸ்க்கு ஆளாகிறான். இதனால் நீ தான் அவதி அடைவாய் பெண்ணே.... .

4. கணவர், பிள்ளைகள் ஆசைப்படும் உணவுவகைகளை நீதான் தயார் செய்ய வேண்டும். அவன் ஒன்னுமே வாங்கி வந்து கொடுக்கமாட்டிங்கிறான் என்று அவனை கெடுத்து விடாதே பெண்ணே. மொச்சை,தட்டப்பயிறு ஆகியவற்றை படிக்கணக்கில்

உன் வீடு அருகில் கொண்டுவந்து விற்கும் போது மொத்தமாக வாங்கி திருகையில் உடைத்து புடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு ஆவியில் வேகவைத்த உணவுப்பொருட்களையே அதிகம் கொடுக்க வேண்டும். குலக்கட்டை, இடியப்பம், சீடை உருண்டை, நீங்களே தயார் செய்து குழந்தைகள் சாப்பிட கொடுக்க வேண்டும். மண்டவெல்லம்,உளுந்துசேர்த்த உணவுகளை அதிகம் குழந்தைகளுக்கு கொடுங்க. கடையில் விற்கும் உணவுப்பொருட்கள் அனைத்தும் விஷம். உன் குழந்தை ஆரோக்கியமான உடலை பெற வேண்டுமானால் நீ கஷ்டப்பட்டுதான் ஆக வேண்டும். ஆண் உழைத்தால் உலகம் பெயர் சொல்லாது. பெண் உழைத்தால் உலகம் சரித்திரத்தில் பெயர் பதிக்கும்.

## எய்ட்ஸ் நோய் முடிவு மரணம்.....

எய்ட்ஸ் உள்ள உலகத்தை யாரும் காப்பாற்ற முடியாது... .

எய்ட்ஸ் நோய் வந்த ஒரு நபர் குறைந்தது 50 பேருக்காவது பரவச்செய்து விட்டுதான் இறப்பாங்க. அப்படியென்றால் பத்து நோயாளி போதும். தமிழ்நாட்டை சாகடிக்க......?.

## (வருங்காலம் வருந்துறகாலம்)

ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு நோயோடு பிறக்கும். நீ ஒரு நோயோடு இருந்தால் உன் வம்சம் நோயோடு பிறந்து சில நாட்கள், மாதங்களில் அழியபோகுது...

இதை தடுக்க யார் சட்டம் போடுவாங்க...

நீ உள்ளாட்சி தேர்தலுக்கு 200ரூ வாங்கி வாக்களித்தாயே அவரா?

இல்லையா??? அப்புறம் பெரிய தேர்தல் 500ரூ கொடுத்தாங்களே கருணாநிதி, ஜெயலலிதாவா??????... இல்லையா???.....

அப்புறம் யாரடா????? உன்னை படைத்த கடவுளே வந்தாலும் யாரையுமே காப்பாற்ற முடியாது......... ஏன்டா அப்படி சொல்ற

கடவுள் ஒவ்வொரு மனித உறுப்புகளையும்(காது, மூக்கு, இதயம், கணையம், கல்லீரல்) படைக்கும் போது எவ்வளவு கஷ்டப்படுவார் என்று எனக்குதான் தெரியும். கடவுள் காத்தல்,அழித்தல்,படைத்தல் மூன்று வேலைகளையும் செய்வார். நீ கேள்வி பட்டு இருப்பாய் இரண்டுதலைகளை படைத்த ஒரு உடல் கொண்ட குழந்தை, பிறவியிலே அதை ஊனம் என்று சொல்வோம்... அப்படி கஷ்டப்பட்டு படைத்த உறுப்புகளை மனிதர்கள் அழித்து கொண்டால் அவர்(கடவுள்) அதற்கு பொறுப்பல்ல...

## மனித இனத்தை காப்பற்ற போவது யார்???
## சீக்கிரம் பதில் தேடுங்கள்

பெண்ணே உனக்கு சீர்வரிசை செய்த பானை எதுக்கு தெரியுமா?

நீ தினம் அதில் தண்ணீர் வைத்து பருகனும் என்பதற்காகதான்... இதன் சுவை எப்படி இருக்கும் தெரியுமா? வெங்கலபானையை பயன்படுத்துங்க.. பிளாஸ்டிக் குடத்தை பயன்படுத்தாதிங்க...

மனித ஆயுளை 5 ஆண்டுகள் கேஸ்(சிலிண்டர்) சாப்பிட்டு விடுகிறது. குடும்ப ஆரோக்கியத்திற்கு தேவையான உணவுகளை விறகு வைத்து சமைக்க பழகுங்கள் தாய்மார்களே???...

கடைக்காரர்கள் எல்லாம் பாலீதின் பைகளை தெருவில் எரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதை பயன்படுத்துவதை விட அதன் புகையை சுவாசிப்பது எவ்வளவு நச்சுத்தன்மை தெரியுமா? இதன் காற்றை ஒருவாரம் சுவாசிக்கும் கடைகாரன் அடுத்த வாரம் கடைதிறக்காமல் மருத்துவமனையில் தான் இருப்பான் இதன் முடிவும் மரணம் தான்....

## குரங்கு = மனிதன்

குரங்கிலிருந்து மாறிய நீ

மறுபடி குரங்காக மாறினாலும்

உயிர் பிழைக்க முடியாது.

## நீ தான் என் முதல் எதிரி

உன்னைப் பார்த்துதான் எவ்வளவு சாப்பிடனும்

எப்படி உடம்பை வைத்துகொள்ளனும் என்று கற்றுக்கொண்டேன்.

உன்னைப் பார்த்துதான் எவ்வளவு தூரம் உழைக்கனும் முன்னேறனும் என்று கற்றுக்கொண்டேன்.

உன்னைப் பார்த்து நிறைய விஷயங்களைக் கற்றுக்கொண்ட நான்

உன்னை எப்படி சண்டை போடுவேன்..

உன்னை சண்டை போட்டால் நான் எப்படி வளரமுடியும் அதனால் நீ

என் முதல் எதிரியாக இரு.

## படேல் ,தாத்ரி

உழைத்துக் கொண்டே இரு உழைத்துக் கொண்டே இரு

உழைப்பு உனக்கு தேவையானதை தந்துவிடும்.

தியானம் செய், தியானம் செய்

தியானம் உனக்கு தேவையானதை தந்துவிடும்.

## மோடிக்கு — கருத்து

சிலிண்டர் மனிதனின் ஆயுள் 5 வருடத்தை சாப்பிட்டுவிடும்

இயற்கையான விறகு மனிதனின் ஆயுளை அதிகரிக்க செய்யும்.

அதிக நேரம் ஆவியில் வேகும் உணவுப்பொருட்களை கட்டாயம் மண்பாண்டங்களில் சமைத்தால் தான் மனிதன் இனம் உயிர் பிழைக்கும்.

## தாய்நாடு அழிகிறது

பெண் தாய்மை அடைவதால் நாடு தாய்நாடு ஆனது.

பெண் உழைக்காததனால் தாய்நாடு அழிகிறது.

பெண் விலைமாந்தர் ஆவதால் தாய்நாடு அழிகிறது.

பெண் பொய் சொல்வதினால் தாய்நாடு அழிகிறது.

பெண் ஆரம்பார பொருளாக திரிவதால் தாய்நாடு அழிகிறது.

பெண் போதைப் பொருளாக திரிவதால் தாய்நாடு அழிகிறது.

## கருப்பு நிறம் - சிவப்புநிறம் = மனிதன்

தன் உடலுக்கு அதிகநேரம் சூரிய ஒளியைப்பட வைத்தவன் கருப்பு.

சூரிய ஒளியைப் பயன்படுத்தாதவன் உடலின் நிறம் சிவப்பு.

தன் உடலுக்கு தேவையான ஆற்றலுக்கு வைட்டமின் சத்துக்களை தரக்கூடியது

சூரிய ஒளி மட்டுமே.

# பாலீதின் பைகள் கேன்சர் கட்டிகளைதான் பரிசாக தரும்

**பாம்பின் புற்றை உடைத்தால் அது விஸ்வரூபம் எடுத்து மற்றொரு இடத்தில் பயங்கரமான தோற்றம் கொடுக்கும். அதுபோல தான் மனிதனுக்கு கேன்சர்(புற்றுநோய்) வந்தால் வெளிஉறுப்பில் ஆபரேசன் பண்ணும்போது உயிர் ஊஞ்சலாடிக்கிட்டு இருக்கும். சிறிது நாள் கழித்து உள்உறுப்பில் புற்று வளரும் போது உயிர் உடலைவிட்டு பிரிந்து விடும்.**

(நமக்கு சாராயம், பாக்கு, புகையிலை,சிகரெட் தயாரித்து கொடுத்தவங்க, நமக்கு லஞ்சம் கொடுத்தவங்க, லஞ்சம் வாங்கியவுங்க அனைவரும் சமமாக சாகப்போகிறோம். இதில் ஒருத்தரை கூட விட்டுவைக்காது 5- வருடத்திற்குள் நோய்கள் )

பெண்மை என்றும் தோற்பதில்லை .....

ஆண்கள் ஆரோக்கியத்துடன் இருந்தால்.......

பெரிய தேர்தலுக்கு 1000-ருபாய் கொடுத்ததை தேவையில்லாத தொழிற்சாலைகளுக்கு (உடலுக்கு நோய் தரக்கூடிய) உணவுபொருள் தயாரிக்கும் தொழிற்சாலையாக இருக்கட்டும், உடைகள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளாக இருக்கட்டும்,அலுமிய பாத்திங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளாக இருக்கட்டும் அவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தால்தான் நமக்கு தலைக்கு 1000ருபாய் கொடுத்ததை அங்கு சரிசெய்ய முடியும்.

அதேபோல் உள்ளாட்சித் தேர்தலுக்கு ஊராட்சித் தலைவராக போட்டியிடும் போது ஒரு ஓட்டுக்கு 200ரூ செலவு செய்த கடன்களான, மாமனார் வீட்டில் மாமனார் வாங்கிக் கொடுத்த கடன், கொழுந்திய வாங்கிக்கொடுத்த கடன், தம்பி மனைவியின் நகையை திருப்பிக் கொடுக்கனும் எல்லாக் கடன்களையும் அடைக்கனும். அப்பதானே அவர் (ஊராட்சித்தலைவர்) நிம்மதியாக இருக்கமுடியும். அப்புறம் அவர் வாங்கிய கடன்களை அடைக்கனும் என்றால் கட்டாயம் லஞ்சம் வாங்கித்தான் ஆகனும். அதற்கு யார் காரணம் நாம்தானே காரணம். பின் அவர் நம்வீட்டில் இறப்பிற்கு 2000ரூ தருவதை வாங்குவதற்கு 15 முறை அலைய விடுவார். பின் அதில் ஊராட்சித்தலைவருக்கு 500ரூ கொடுக்கனும். கட்டாயம் கொடுக்கனும். கண்மாய் வேலை செய்யச் சொல்வதாக சென்று போட்டோ, ரேசன்கார்டு நகல்கள் கேட்டு அவர்களை நடையாக நடக்கச் செய்கிறார்கள். பின் பணத்தை வங்கியில் நம் கணக்கில் ஏற்றியதாக பணத்தை எடுத்துக்கொள்ள சொல்றாங்க. நாம் என்ன செய்கிறோம் கண்மாயில் சொல்லுங்க யாருமே முழுமனதுடன் வேலை பார்ப்பது இல்லை. அதை ஒழுங்கா வேலையை நேர்சீர் பண்ணுவது இல்லை. கரைகளை முறையாக உயர்த்தினாலும் அது ஒரு பக்கம் பெரிய வெள்ளமாக செல்லக்கூடிய அளவிற்கு பெரிய பிளவு இருக்கிறது. இந்த (பிளவு) அணையை உயர்த்தாமல் அப்படியே இருக்கும். சீமைக்கருவையை வேருடன்,(JGB) விட்டு வெட்டச் சொல்லி ஆர்டர் வந்தது. அதை என்ன செய்தாங்க மரங்களை மட்டும் வெட்டிவிட்டு அதன் கன்றுகளை அப்படியே விட்டு விட்டாங்க. அதன் வளர்ச்சி அதன் (பழைய மரம்)அம்மாவையும் தாண்டி விட்டது. கண்மாயில் பெண்கள் எவ்வளவு சிரமப்படுவார்கள் தெரியுமா?..... இவர்களின் சிரமப்பட்டதால் தான் கண்மாய்கள் பெருகி நிறைய வெள்ளம் போகிறது. இந்த பெண்கள் கட்டாயம் உடலுக்கு உழைப்பு கொடுக்காமல் இருந்ததால்தான் சர்க்கரை,ரத்த அழுத்தம் அப்படியே இருக்கிறது. அரசை நாம் ஏமாற்றியதாக நினைக்கிறோம். தமிழகஅரசு நம்மை எப்பவே விலைக்கு வாங்கிவிட்டது. என்ன விலை கொடுத்தாவது நம் ஓட்டை வாங்கிவிடும். அப்பண்ட அரசு சொல்வதை தான் நாம் கேட்கனும்.

ஒவ்வொரு ஆறாவது படிக்கும் மாணவனும் பீடி, சிகரெட்,மது குடிக்க ஆரம்பித்து விட்டான். [illegible]

இருக்காது. ஒவ்வொரு கடைக்காரனும் எந்த மாநிலத்து புகையிலையாக இருந்தாலும் சரி.
கணேஷ் பாக்குகளாக இருந்தாலும் சரி ஒரு ரூபாய் லாபம் கிடைத்தால் போதும் வாங்கி விற்க
ஆரம்பித்துவிடுகிறார்கள். கடைக்காரர்கள் அச்சுமுறுக்கு, அதிரசம், மாமிசம்(கறி),
மண்டவெல்லம், எண்ணையில் சுட்ட பலகாரங்களை அப்படியே நேரடியாக ஒரு பேப்பர் கட்டி
உணவுப்பொருளை கொடுக்காமல் அப்படியே பாலீதின் பையில் போட்டுக்கொடுக்கிறார்கள். இதை
வாங்கி சாப்பிட்டால் உடலுக்கு பலம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் தான் வாங்குகிறோம்.
ஆனால் இங்கு பாலீதின் பை கேன்சர் கட்டிகளை தான் நம் உடலுக்கு தரும். இதுக்கு மருந்து
(கேன்சர்-மரணம்). கடைக்கு செல்லும் ஒவ்வொருவரும் கட்டாயம் கட்டைப்பை,துணிப்பை
கொண்டு செல்லுங்கள். கறிக்கடைக்கு போகும்போது பாத்திரம் கொண்டுபோய் வாங்குங்கள்.

பிச்சைக்காரன் தட்டு மாதிரி, பழைய பாத்திரம்(திருடியது), 30ரூபாய் அலுமினிய
சட்டிகள் இவைகள் தெருவில் விற்றால் ஓடிபோய் விலை குறைவாக உள்ளது என வாங்கி
சமைத்து சாப்பிடுகிறோம். இங்கு இருந்துதான் நோய்கள் முதல் ஆரம்பம் விலைமதிப்பு மிகுந்த
பாத்திரத்தில் சமைத்து சாப்பிடுங்க. அந்த சட்டியின் முத்திரை பாத்திரத்தின் அடியில் இரண்டு
அல்லது மூன்று எழுத்து காணப்படும். அனைவரும் இவைகளை சிறிது தவிர்த்து சோறு,குழம்பு
செய்ய மட்டும் மண்பானைகளை பயன்படுத்துங்க. உங்களுக்கு பாத்திரம் விளக்கவும் வசதியாக
இருக்கும். அதேபோல் பிளாஸ்டிக் பானையை தூக்கி எரிந்து விடுங்க. உங்க உடல் விலை
மதிப்பு மிகுந்தது. உங்க வீட்டில் உள்ள பாலீதின் பைகளை ஒரு நாள் எனக்காக சுத்தமாக
எடுத்து மறுபடி வீட்டிற்கு வராதவாறு காத்துக்கங்க. இந்த கண்டெடுக்கப்பட்ட பைகளை
மண்ணில் புதைத்து விடுங்க. உங்க தலைமுறை 100 ஆண்டு செழித்து நிற்கும். மாவு
ஆட்டுகல்லில் ஆட்டினால் தான் சத்து கரண்ட்டில் (கிரைண்டர்) சத்து கிடையாது. அது
கஷ்டமாக இருக்கு என்று நினைத்தால் அம்மியின் கல்லை உரலில் போட்டு மாவை ஆட்டுங்க.
10 நிமிடத்தில் 1காப்படி அரிசி ஆட்டி முடித்துவிடுவீங்க. முருங்கக்கீரையை வாரத்தில் 2நாட்கள்
சேர்த்து கொள்ளுங்கள் உடலுக்கு தேவையான இரும்புச்சத்தை இது அள்ளித்தரும். மருந்து
அடிக்காத காய்கறிகள், வேர்கடலை, பப்பாளி பழங்கள், ஆகியவற்றை விரும்பி சாப்பிடுங்கள்.

நாம் சம்பாதிக்கும் பணத்தில் நான்கில் ஒருபங்கு தானம்,தர்மம் பண்ண வேண்டும். பணம்,பொருள்
கொடுத்து உதவ இல்லாதவுங்க தொண்டு செய்ய வேண்டும். எப்படி என்று கேட்கிறிங்களா?. எனது ஊர் சிறுகுடி
கிராமம். எனது வேலை நாட்கள் போக மீதி நாட்களை மாதத்தில் 2நாள் எனது கிராமத்தை சுற்றியுள்ள ஊரில்
உள்ள குப்பைகளை நானே நேரடியாக அள்ளி 4 சித்தால்களை வைத்து வண்டியில் அள்ளப்போகிறேன். ரோடுகளில்
அசுத்தம் செய்வதை தடுக்க மாற்றுவழி ஏற்பாடு செய்ய போகிறேன்.

எம். ஆசைப்பொன்னு
சிறுகுடி
நத்தம் தாலுகா
திண்டுக்கல் மாவட்டம்
9787043124-செல